**எழுத்தாளர்களிடமிருந்து குடிமக்களுக்கு ஒரு வேண்டுகோள்**

வெறுப்பு அரசியலுக்கு எதிராக வாக்களிப்போம்; சமத்துவமும் பன்மைத்தன்மையும் கொண்ட இந்தியாவுக்கு வாக்களிப்போம்.

வரவிருக்கும் மக்களவைத் தேர்தல் நமது நாடு ஒரு குறுக்குச் சாலைச் சந்திப்பில் நிற்பதைக் காண்கிறது. நமது அரசியல் சாசனமானது, குடிமக்கள் அனைவருக்கும் சம உரிமைகளையும், விரும்பியதை உண்ணவும், விரும்பியபடி வழிபாடு செய்யவும், கருத்துகளை வெளிப்படுத்தவும், மற்றும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கவும், உரிமையும், சுதந்திரமும் அளித்துள்ளது. ஆனால் கடந்த சில வருடங்களாக, குடிமக்கள் தான்தோன்றித்தனமாகக் கொல்லப்படுவதையும், தாக்கப்படுவதையும், ஒருவர் சார்ந்துள்ள குழு,சாதி,பால் ஆகியவற்றாலும், அல்லது ஒருவர் சார்ந்துள்ள நிலப்பரப்பை வைத்தும், அவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதையும் காண்கிறோம். இந்த வெறுப்பு அரசியலானது நாட்டைப் பிளவுபடுத்தி, மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி அவர்களை முழுமையான குடிமக்களாக வாழவிடாமல் மேலும் மேலும் அவர்களை ஒதுக்கி வைக்கிறது. எழுத்தாளர்கள், படத்தயாரிப்பாளர்கள், இசைக்கலைஞர்கள், பிற கலாச்சாரத்தைக் கொண்டவர்கள், வேட்டையாடப்படுகிறார்கள்; மிரட்டப்படுகிறார்கள்; தணிக்கை செய்யப்படுகிறார்கள். அதிகாரங்களைக் கேள்வி கேட்பவர்கள் தொடர் துன்புறுத்தலுக்கும், தவறான அல்லது மலினமான குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்படுதலுக்கும் உட்படுகின்ற அபாயத்தில் இருக்கிறார்கள்.

நாம் அனைவருமே மாற்றத்தை விரும்புகிறோம். பகுத்தறிவாளர்கள், எழுத்தாளர்கள், சமூகச்செயல்பாட்டாளர்கள், இனியும் வேட்டையாடப்படவும், கொலை செய்யப்படவும் நாம் விரும்பவில்லை. பெண்களுக்கும், தலித்துகளுக்கும், ஆதிவாசிகளுக்கும் மற்றும், சிறுபான்மை இனத்தவருக்கும் எதிராக சொல்லாலும் செயலாலும் ஏற்படுகின்ற அனைத்து வன்முறைகளுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென விரும்புகிறோம். எல்லோருக்கும் வேலை, கல்வி, ஆராய்ச்சி, சுகாதாரம், ஆரோக்கியம் ஆகிய அனைத்திலும் சம உரிமைகளும் வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டுமென விரும்புகிறோம். நம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும், ஜனநாயகம் தழைத்தோங்கவும் விரும்புகிறோம்.

நாம் இதை எப்படிச் செய்யப் போகிறோம்? மிக அவசரமாகத் தேவைப்படும் இந்த மாற்றத்தை நாம் கொண்டுவருவது எப்படி? நாம் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய காரியங்கள் பல உள்ளன. அதற்கான காத்திரமான முதல் படி இதோ.

நாம் விரைந்து எடுக்கக் கூடிய முதல் படி இது.

இந்த வெறுப்பு அரசியலுக்கு எதிராக வாக்களித்து அதற்கு விடை கொடுப்போம். சமத்துவமின்மையை நூக்கி மக்களிடையே உள்ள வேறுபாடுகளைக் களைவோம். வன்முறைகள் மிரட்டல்கள் தணிக்கைகளுக்கு எதிராக வாக்களிப்போம். நமது அரசியல் சாசனம் நமக்கு அளித்துள்ள வாக்குறுதிகள் புத்தாற்றல் பெறுவதற்கு இது ஒன்று மட்டுமே சிறந்த வழி. இதற்காகத்தான் உங்களிடம் சமத்துவமும் பன்மைத்தன்மையும் கொண்ட இந்தியாவைச் சமைத்திட சரியாக வாக்களியுங்கள் என்று வேண்டுகிறோம்.